# வேளாண்மை செய்திகள்

## பழங்கள், காய்கறிகளை பறிக்க உதவும் 'பழப்பறிப்பான்'

உழவு முதல் அறுவடை வரை எந்திரமயமானாலும் பழங்க்ள் மற்றும் காய்கறிகன்ள அறுவடை செய்வதற்கு அதிக அளவில் வேலையாட்கள் தேவைப்படுகின்றனர். விவசாயிகள் தாங்கள் விளைவித்த பழங்கள் மற்றும் காய்கறிகளை அறுவடை செய்யும்போது, 10 முதல் 15 சதவீதம் சேதார இழப்பு ஏற்படுகிறது. மேலும் அறுவடை



செய்வதற்கு வேலையாட்களின் தேவை மற்றும் கூலி அதிகமாகிறது. ஆகையால் சேதார இழப்பை தடுத்து எளிய முறையில் பழங்களைப் பறிக்க 'பழப்பறிப்பான்' பயன்படுகிறது. 'பழப்பறிப்பான்' என்பது பழங்களை எளிதில் சேதாரம் இல்லாமல் பறிக்க பயன்படும் கருவி ஆகும். பழப்பறிப்பானை கொண்டு மா, கொய்யா, சப்போட்டா, எலுமிச்சை, சீத்தாப்பழம், காய்கறிகள் மற்றும் பந்தல் காய்கறிகளான பாகல், புடலை போன்ற காய்கறிகளை அறுவடை செய்யலாம்.

பழப்பறிப்பான் இரும்புக்கம்பிகளால் வடிவமைக்கப்பட்டு ஈயமுலாம் பூசப்பட்டது. பழங்களை பறிப்பதற்கு 2 சிறிய கூர்மையான கத்தி இணைக்கப்பட்டுள்ளது. சுமார் 5 ஆயிரம் பழங்கள் பறித்தவுடன் கத்தியை மாற்றிக் கொள்ள வேண்டும். பழங்களை சேகரிப்பதற்கு நைலான் வலை பொருத்தப்பட்டுள்ளது. மரத்தின் உயரத்துக்கு ஏற்றபடி பழப்பறிப்பானை மூங்கில் கம்புகளுடன் இணைத்து பயன்படுத்திக்கொள்ளலாம். இது அளவில் சிறியது. எடையும் குறைவானது. சிறியவர் முதல் பெரியவர் வரை அனைத்து வயதினரும் பயன்படுத்தக்கூடியது. 60 முதல் 80 சதவீதம் சேதாரம் இழப்பை தடுக்கக்கூடியது. குறைந்த நேரத்தில் அதிக பழங்களை பறிக்க பயன்படுகிறது. வேலையாட்களின் எண்ணிக்கையும் குறைகிறது.

இந்த தகவலை காமாட்சிபுரம் சென்டெக்ட் வேளாண் அறிவியல் மைய மனையியல் தொழில்நுட்ப வல்லுனர் ரம்யா சிவசெல்வி தெரிவித்தார்.